1990 ஆகஸ்ட் 20]

தருமபுரி மாவட்டத்தின் தலைநகர்

* 9991 டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரியை தருமபுரி மாவட்டத்தின் தலைநகராக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

போக்குவரத்து கழகத்தின் மூலம் நிழற்குடைகள் அமைத்தல்

* 6271 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நிழற்குடைகள் கட்ட மீண்டும் அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதுவாக நிழற்குடைகள் தனியாரால் கடைகள் வைப்பது, கால்நடை கட்டுவது, போன்ற தவறான உபயோகத்திற்குட்படுத்தப்பட்டதால் போக்குவரத்துக் கழகங்கள் நிழற் குடைகள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்தத் தேவையில்லை என்று அறிவுறுத்தப்பட்டன. எனினும் பொது மக்களின் அத்தியாவசியத் தேவையையும் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையையும், கருத்தில் கொண்டும், மேலும் பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தாமாகவே கொடுக்கும் நன்கொடையைக் கொண்டும் போக்குவரத்துக் கழகங்கள் நிழற்குடைகள் அமைக்கும் பணியை மேற்கொள்ளலாமென அக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.